Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 5 ம் நாள் லபர் 7 (18-6-64) வியாழக்கிழமை இதழ் 130

ஈழநாடு
சந்தா விபரம்

இந்தியா — இலங்கை

| | வாரபதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# நிதிமந்திரி-யாழ் மேயர் சந்திப்பு

## கொழும்பில் இன்று நிகழும்

### மின்சார அபிவிருத்திக் கடன் குறித்து பேச்சு நடத்துவார்கள்

கொழும்பு, வியாழன்

யாழ்ப்பாண நகரமேயர் திரு. தா. ச. துரைராஜா இன்று நிதிமந்திரிடாக்டர் என். எம். பெரேராவைச் சந்திப்பார். யாழ்ப்பாண மாநகர அபிவிருத்தி சம்பந்தமாக கடன் வசதி பெறும் பொருட்டு மேயர் திரு. துரைராஜா டாக்டர் என். எம். பெரேராவுடன் பேச்சுக்கள் நடத்துவார். இவர்களிருவரும் இன்று வியழக்கிழமை பிற்பகல் 2-30க்கு நிதிமந்திரி காரியாலயத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள்.

புதியநிதிமந்தரிடாக்டர் என். எம். பெரேராவை சந்திக்கும் பொருட்டு நேற்றுக் காலை மேயர் திரு. துரைராஜா யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்துசேர்ந்தார்.

மாநகரசபை பகுதி அபிவிருத்தி வேலைகளுக்காக கடன் பெறும் பொருட்டு புதிய நிதி மந்திரி டாக்டர் என். எம் பெரேராவைச் சந்திக்கும் முதல் மேயர் திரு. துரைராஜா தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண நகரின் மின்சார திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு கடன் பெறுவது சம்பந்தமாக நிதிமந்திரியுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் இதற்கான திகதியொன்றை நிச்சயிக்கும்படியும் மேயர் துரைராஜா நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவைக் கோரியிருந்தார். மேயரின் இக்கோரிக்கைக்கிணங்கவே இன்று இவர்களின் சந்திப்பு இடம் பெறுகிறது.

யாழ்ப்பாணம் மேயரின் திட்டத்துக்கிணங்க, யாழ்ப்பாணம் மாநாகரசபை எல்லைக்குள்ளிருக்கும் மின்சார வசதிகள் இல்லாத பல பகுதிகள் மின்சார வசதி பெறும் எனத் தெரிய வருகிறது. இதனுடன் இரவு வேலைகளில் போதிய மின்சார வசதி கிடைக்கவும் மின்சக்தியை அதிகரிக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட மேயர் திரு. துரைராஜா சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மீன்பிடிகார்ப்பரேஷன் நிறுவ மந்திரி பீலிக்ஸ் யோசனை

கொழும்பு, புதன்

மீன்பிடித்தல், அவற்றை விற்பனை செய்தல், மீன்பிடி ஆராய்ச்சி ஆகியவற்றை ஒரு கார்ப்பரேஷனுக்குக் கீழ் கொண்டு வரும் முயற்சியில் புதிய மீன்பிடி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா ஈடுபட்டுள்ளார். மீன்பிடி கார்ப்பரேஷன் ஒன்றை நிறுவுவதன் மூலம் மேற்குறிப்பிட்ட மூன்று துறைகளையும் மேற்பார்வை செய்வது சுலபமாவதுடன் வேலைகளும் துரிதமாக நடைபெறமுடியுமென்றும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா கருதுகிறார்.

மீன்பிடி இயந்திரங்களை அதிகமாகப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டுக்குத் தேவையான மீன்களை பிடிக்க முடியுமென்று திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அபிப்பிராயம்கொண்டுள்ளார்.

இலங்கை — யூகோஸ்லேவியா வர்த்தக உடன்படிக்கையின்கீழ் வெகுவிரைவில்யூகோஸலேவியாவிடமிருந்து ஐந்து மீன்பிடி இயந்திரங்களை இலங்கை பெறவிருக்கிறது.

உள்நாட்டு மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகள் இலங்கைக்குத் தேவைப்படுகிறதென்றும் இந்து மகா சமுத்திரத்தில் மீன்பிடித் தொழிலில் இலங்கையுடன் போட்டியிடாத ஒரு நாட்டிலிருந்து ஆலோசனை பெறுவது மிகவும் உபயோகமாகவிருக்குமென்றும் மந்திரி பீலிக்ஸ டயஸ பண்டாரநாயக்கா கருதுகிறார்.

## மந்திரியின் புதிய திட்டம்

கொழும்பு, வியாழன்

நடைமுறையில் இருப்பது போலல்லாது வேறு பாதைகளில் பஸ்களை ஜூலை 1-ந் தேதியிலிருந்து விடுவதென்று போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா முடிவு செய்திருக்கிறார். அத்துடன் ஒரு மத்திய பஸ்நிலையத்தையும், பிரயாணிகள் தங்கும் அறைகளையும் கோட்டையில் அமைப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறார்.

—

## அந்தோ பரிதாபம்!

யாழ்ப்பாணம், வியா

புதிய பஸ்நிலையம் உருவாக்கப்படுவதை முன்னிட்டு தினமும் பஸ் பிரயாணிகள் மிகுந்த கஷ்டமனுபவித்து வருகிறார்கள்.

தற்போதைய பஸ் நிலையத்திலுள்ள பிரயாணிகள் தங்குமிடம் சிறிது சிறிதாக அகற்றப்படுவதையிட்டுப் பஸ் பிரயாணிகளிடையே பெரும் அதிருப்தி நிலவுகின்றது. இதன் விளைவாகப் பஸ் சேவைப் போக்குவரத்து சீர்கேடுகளினால் தினமும் பாதிக்கப்பட்ட பஸ் பிரயாணிகள் இப்பொழுது கொதிக்கும் வெய்யிலில் காயவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"பஸ் பிரயாணிகள் தங்குமிடத்தை அகற்றும்பொழுது அதற்குப் பதிலாக வேறு தங்குமிடத்தை ஒதுக்கவேண்டுமல்லவா?" என்று நமது நிருபர் கேட்டதற்கு "நாங்கள் எதைச் சொல்ல; இதெல்லாம் எமக்குக் கிடைத்த உத்தரவு" என்று பஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வல்வெட்டித்துறையில் இராணுவ தாக்குதல்!

## எம். பி. யிடம் பொதுமக்கள் புகார்

காங்கேசன்துறை, புதன்

வல்வெட்டித்துறையில் நேற்றிரவு சிலரை இராணுவத்தினர் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

வல்வெட்டித்துறையில் வசிக்கும் கந்தசுவாமி சிவகுரு என்பவர் தமது வீட்டு முன் வாசலில் நின்றபொழுது, அங்கு ஜீப்பில் வந்த இராணுவத்தினர் சிலர் அவரைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. இதனைத் தொடர்ந்து அங்கு வந்த வேறு சிலரும் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளானார்கள் எனத் தெரியவருகிறது.

இராணுவத்தினரின் இச்செயல் குறித்து பருத்தித்துறை எம். பி, திரு. க. துரைரத்தினத்திடம் பொதுமக்கள் புகாரசெய்துள்ளனர்.

# தலையீடு!

## தமிழ் ஆசிரியர் குற்றச்சாட்டு

வவனியா, புதன்

"வெளி மாகாணங்களில் இடர்ப்படும் அரசினர் பாடசாலை ஆசிரியர்களை இடமாற்றஞ் செய்ய முயற்சியெடுக்கும் ஒவ்வொரு முறையும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையிட்டு இழைக்கும் அநீதிகளோ அளப்பிலாதவை. இவர்களின் நியாயமற்ற தலையீட்டினால் எமது முயற்சிகள் எதுவும் பயனளியாது போகின்றன. எமக்குப் பாராளுமன்ற உறுப்பினர் மீது தனிப்பட்ட கோபமெதுவுங் கிடையாது. சங்கங்களுக்குச் சமநீதி வழங்கப்படவேண்டுமென்பதே எமது கண்ணியமான கோரிக்கை."

இவ்வாறு வடபிரதேச ஆசிரியர்களின் கூட்டுச் சபைக் காரியதரிசி திரு. அ. பொன்னம்பலம் வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க வவனியாக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் உரைநிகழ்த்துகையிற் குறிப்பிட்டார். கூட்டத்திற்கு வவனியாக் கிளைச் சங்கத் தலைவர் திரு. சி. கந்தையா தலைமை தாங்கினர்.

அகில இலங்கை அரசினர் பாடசாலை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எஸ். மகாலிங்கம் பேசுகையில் கட்டாய ஓய்வு உத்தரவு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டால் அல்லது சம்பள உயர்வு நிறுத்தப்பட்டால் அகில இலங்கை அரசினர் பாடசாலை ஆசிரியர் சங்கம் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்றும் அதற்கு வேண்டிய ஆதரவை நல்க ஆசிரியர்கள் தவறிவிடக் கூடாதென்றும் வேண்டிக்கொண்டார்.

'தனியாசிரியர் கடமையாற்றும் பாடசாலைகளில், மாணவ ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்' என்ற தமது கோரிக்கையை வட மாகாணக் கல்வி நெறியாளருக்கு அனுப்பக் கல்விநெறியாளர் திரு. துரைசிங்கம் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் திரு. மகாலிங்கம் தெரிவித்தார்.

விசேஷ சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட திரு. கோடீஸ்வரன் பேசுகையில், அகில இலங்கை அமைப்பில் இயங்கும் எந்தத் தொழிற் சங்கமும் தமிழ்பேசும் மக்களது உரிமைகளுக்காகப் போராட முன்வரும் என்பது பகற்கனவுதானெனவும்வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதை எதிர்க்காத ஸ்ரீலங்கா குருசங்கமயாவின் பிரதிநிதிகள் பேசுவதற்கு மேடை அமைத்துக்கொடுத்த தமிழாசிரியர்கள் தமது சமூகத்துக்கே அவமானத்தைத் தேடிக்கொண்டார்கள் எனவும் குறிப்பிட்டார்.

பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

—

## ஐ. தே. கட்சியிலிருந்து ராஜினமா

கொழும்பு, வியாழன்

வெள்ளவத்தை தெற்கு மாநகரசபை அங்கத்தவர் திரு. லால் சல்காடோ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ராஜினமாசெய்துவிட்டதாக தெரிய வருகிறது.

**முனிவாக்கு**

உண்மையான சமாதானத்தை அடைய ஒரு வழிதானுண்டு. ஒவ்வொரு படியிலும் மேலும் மேலும் சர்வதேசக் கூட்டுறவைச் சாதிப்பதுதான்.

—ஜவஹர்லால் நேரு


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna Telegram. EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஆனி ீ 5 (18-6-64)


## வில்மட் பெரேராவின் யோசனை

நிறைவேற்றப்பட்ட சட்டங்களை அழிப்பதாலோ நீக்குவதாலோ சிறுபான்மையினருக்கு உரிமை கிடைத்து விடாதென்றும் பெரும்பான்மைச் சமூகத்தினருக்கு மனமாற்றம் ஏற்பட்டாலொழிய இப்பிரச்சினைகள் தீரமுடியாதென்றும் திரு. வில்மட் பெரேரா சென்ற செவ்வாய்க்கிழமை இரவு புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டிருப்பது பொதுவாக சகல இனமக்களும் குறிப்பாக அரசியல் வாதிகளும் சிந்திக்க வேண்டிய விஷயம்.

திரு. வில்மட் பெரேரா இலங்கையில் இப்பொழுதுள்ள அரசியல் ஞானி எனக் கருதப்படுபவர். எந்த இடத்திலும் தான சரியென நினைப்பதை அச்சமின்றி எடுத்துரைக்கும் துணிச்சல் வாய்ந்தவர். சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று எப்பொழுதும் கூறிவருபவர். சிறுபான்மைச் சமூகத்தில் மட்டுமல்ல பெரும்பான்மைச் சமூகத்திலும் பெருமதிப்புள்ளவர். என்றாலும் அவரது யோசனைகளை அரசியல் நோக்கம் காரணமாக இதுவரை அரசாங்கமோ ஆட்சி பீடத்திலுள்ளவர்களோ செவிமடுக்கவில்லை. சிறுபான்மையினருக்கு அவர்களது உரிமைகளை வழங்க வேண்டுமென்ற அபிப்பிராயம் தென்னிலங்கை பொது மக்கள் மனதில் வலுப்பெற்று வருவதாக திரு. வில்மட் பெரேரா கூறியிருப்பது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு வருவதைக் குறிப்பதுடன் நம்பிக்கையுமளிப்பதாகவுள்ளது.

சிங்களம் மட்டும் சட்டத்தை ரத்துச் செய்வதற்குரிய வாய்ப்பு இல்லையென்றும் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைத் துணை மொழியாக்குவதன் மூலம் பிரச்னைகள் குறையலாமென்றும் திரு. பெரேரா தெரிவித்துள்ளது கவனத்துக்குரியவை. சிங்களம் உத்தியோக மொழியாவதையோ பெரும்பான்மை மக்கள் தங்களது மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதையோ யாரும் எதிர்க்கவில்லை. எதிர்க்கவும் மாட்டார்கள். ஆனால் சிங்களம் தெரியாத மக்களும் சிங்களத்தில்தான் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் சிங்களத்தைத் தவிர வேறு எந்த மொழியிலும் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள முடியாதென்றும் விதிக்கப்படும் சட்ட விதிகளையும் உத்தரவுகளையுமே சிறுபான்மையினர் எதிர்க்கின்றனர். இந்நாட்டில் இரண்டாவது பெரிய சமூகமாக விளங்கும் தமிழ்பேசும் மக்களின் தாய்மொழியான தமிழ்மொழிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டுமென்பதே அவர்களது கோரிக்கை. தமிழ்பேசும் மக்கள் தங்கள் தாய்மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்வதால் சிங்களச் சட்டம் செல்லுபடியாகாமல் போய்விடுமென்ற வாதத்தை நிதான புத்தி படைத்தவர் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். சிங்களச்சட்ட அமுல் என்ற போர்வையில் தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நிறுத்திக்கொண்டு தமிழ்பேசும் மக்கள் தங்கள் தாய் மொழி மூலம் கல்வி கற்கவும் அரசாங்கத்தில் சேவை செய்யவும் வழி செய்தால் இங்கு சிறுபான்மையோர் பிரச்னைக்கு இடமிருக்காது. சிங்களச் சட்டம் வருவதற்கு முன் ஆங்கில மொழி மூலம் அரசாங்கசேவையில் சேர்ந்தவர்களை சிங்களம் தெரியாத காரணத்துக்காக வெளியேற்றுவதும் தமிழ்மொழி மூலம் சேவையில் சேர்ந்தவர்களை சிங்களத்தில் கருமமாற்ற வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதும் நியாயமாகாது.

இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு பதினான்கு அம்சத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி தமிழ்மொழி உபயோகச் சட்டத்தை அமுல் நடத்துவதன் மூலமும் திரு. வில்மட் பெரேராவின் யோசனைப்படி தமிழ், ஆங்கில மொழிகளைத் துணை மொழிகளாக்குவதன் மூலமும் அரசாங்கம் வழி கண்டு கொள்ள முடியும்.

ஆனால் சிங்களச் சட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பு இப்பொழுது உத்தியோக மொழிக் கமிஷனரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உத்தியோக மொழிக் கமிஷனரிடம் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய முறையில் உத்தியோகமொழி இலாகா இதுவரை நடந்துகொண்டதில்லை. "எதுஎப்படியிருப்பினும் சிறுபான்மையினருக்கு உரிமை வழங்காதவரை நாட்டில் ஐக்கியம் ஏற்படாதென்றும் ஐக்கியம் ஏற்படாதவரை நாடு முன்னேற முடியாதென்றும் திரு. வில்மட் பெரேரா கூறியிருப்பது இலங்கை அரசியலில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்திலாவது ஆட்சி பீடத்திலிருப்பவர்களின் செவிகளில் விழவேண்டுமென்பதே எமது ஆவல்.

அரசாங்க, ஸ்தலஸ்தாபன இலாகாக்களில் விசேஷ அபிவிருத்திப்பகுதிகளை நிறுவுவதென்று திட்டக் கமிட்டி தீர்மானித்திருப்பதாக நிதிமந்திரி தெரிவித்துள்ளார். சிறுபான்மையினரின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்து தேசிய ஐக்கியம் ஏற்படாதவரை எத்தனை அபிவிருத்தித் திட்டங்களையும், அபிவிருத்திக் கமிட்டிகளையும் நிறுவினாலும் உரிய பயன் கிடைக்கமாட்டாதென்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.

# "மொழிப்பிரச்னை தீராதவரை நாடு முன்னேற முடியாது"

## புத்தூர் கல்லூரியில் திரு. வில்மட் பெரேரா கருத்து

நல்லூர், வியாழன்

"சிங்களம் மட்டும் சட்டத்தை திருத்துவதினாலோ அல்லது அழித்து விடுவதனாலோ மொழிப்பிரச்னை தீர்த்துவிட முடியாது. பெரும்பான்மையான மக்களின் ஆதரவுடன்தான் இப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்க முடியும். மொழிப் பிரச்னை தீர்க்கப்படாதவரை இந்த நாடு முன்னேற்றமடைய முடியாது" என்று வில்மட்பெரேரா புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

சிங்கள மக்களிற் பெரும்பான்மையான சாதாரண மக்கள் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்க வேண்டும் என்பதனை உணரத் தலைப்பட்டுள்ளார்கள் என்றும் அவர்கள் நீட்டும் நேசக்கரத்தை தமிழர்கள் தட்டிவிடாது பற்றிக் கொள்ள வேண்டுமென்றும் திரு. வில்மட் ஏ. பெரேரா கேட்டுக் கொண்டார்.

கடந்த செவ்வாய்கிழமை இரவு புத்தூர் சோமஸ் கந்த கல்லூரிப் பரிசளிப்பு விழா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எம். தணிகாசலம் தலைமை வகித்தார்.

திரு. வில்மட் பெரேரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:

இலங்கை பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளது. இலங்கை பத்து லட்சம் சதுர அடி நிலப்பரப்பை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை வந்து விட்டது. தினசரி 900 குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன. கல்வி, உணவு, உடை என்பன போன்ற பல பிரச்னைகள் பாரமாக இருக்கின்றன.

### வெள்ளை அறிக்கை

கல்வி நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இப்போது தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையை பரிசீலனை செய்வதனால் பலன் ஒன்றும் ஏற்படப்போவதில்லை. பல்கலைக்கழக அறிக்கையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். பல்கலைக்கழக அறிக்கையை சார்ந்ததாகவே வெள்ளை அறிக்கை இருக்க வேண்டும்.

இங்கிலாந்து நாட்டில் பாடசாலை நேரத்தைக் கூட்டுவது பற்றி ஆலோசித்து வருகிறார்கள். கல்வி செயலுக்கேற்ற வகையில் அமைந்திருக்க வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

பரீட்சைகள் ஒரு மாணவனின் முழுத் திறமையையும் காண்பிக்க மாட்டாது. ஒரு மாணவன் புத்தகங்களுடன் பரீட்சை நிலையத்துக்குச் சென்றால் அவன் அங்கிருந்து வெளியேற்றப் படுவதோடு அபராதமும் விதிக்கப்படுகிறான். ஆனால் அதே மாணவன் புத்தகங்களிலிருக்கும் விஷயங்களை மூளைக்குள் செலுத்தி பரீட்சை எழுதினால் தண்டனை ஒன்றுமில்லை. அவனது திறமைக்காக பாராட்டப்படுகிறான். இச் செயல் விநோதமாக இருக்கிறது. வெறும் பாடங்கள் மட்டும் மாணவனுக்குப் போதியதாகாது. சகலவிதமான துறைகளிலும் மாணவர்கள் போதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் கல்வி அவர்களுடைய வாழ்க்கைக்கு உதவும்.

பாடசாலைப் பற்றுக் குறையைப் போக்க மாணவர்களின வயதை அதிகரிப்பது பற்றி ஆலோசிக்கப் பட்டுவருகிறது. ஆங்கில நாட்டிலும் இத்தகைய முறை அமுலில் உள்ளது.

ஆங்கில நாட்டில் ஒரு தவணைக்கு 14 தினங்கள் மாணவர்கள் வேலைசெய்ய வேண்டும் என்று விதிமுறை உண்டு. இதனை பலாத்காரமாக மாணவர்களை வேலை வாங்குவதற்காக என்று ஒருவரும் நினைக்கக் கூடாது. மாணவர்கள் மனத்திலும் இத்தகைய எண்ணம் உருவாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலை அபிவிருத்திக்கோ ஏனைய முன்னேற்றங்களுக்கோ பணமில்லை. உயர இருந்து கொண்டு நாட்டின் நிலைமையைக் கவனிக்காமல் நாட்டின் நிலைமையை ஒவ்வொரு திட்டத்துடனும் தொடர்பு படுத்தி திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

### திரவிய அறை காலி

புதிய நிதி மந்திரியாகப் பதவியேற்றுள்ள டாக்டர் என். எம் பெரேரா திறமைசாலி, அறிஞர், விசுவாசமுள்ளவர். அரசாங்கத்தின் திரவிய அறை காலியாகக் கிடக்கிறதே என்று அவர் சொல்லி விட்டார். திரவிய அறை காலியாக இருப்பதனால் அவர் எதனைச் செய்ய முடியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. 15 பேர் கொண்ட மந்திரி சபையில் டாக்டர் பெரேராவின் திறமை வெளிப்படுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

### கசப்பு மனப்பான்மை

சிங்கள தமிழ் சமூகங்களிடையே கசப்பு மனப்பான்மை நிலவி வருகிறது. இப்போதுள்ள எந்தச் சட்டத்தை மாற்றினாலும் பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியாது.

ஜனநாயகம் என்றால் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்று பொருள்படும். பெரும்பான்மைச் சமூகத்தினரின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினால் தான் பிரச்னைகள் தீரமுடியும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையினால்தான் ஒற்றுமை உணர்வு பிறக்கும்.

பார்லிமெண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட போது டாக்டர் என். எம். பெரேரா அதனை எதிர்த்து வாதாடினர். அப்போது அவர் என்னிடம் சிங்களச் சட்டத்தை எதிர்ப்பதனால் எமக்கு அரசியல் வாழ்வு இனிக் கிடைக்காது என்றும் இதனைக் கண்டு கவலைப்படாமல் அநீதியை எதிர்த்தே தீரவேண்டும் என்றும் சொன்னார். டாக்டர் பெரேரா இன்று கூட்டரசாங்கத்தில் பதவியேற்றிருக்கிறார். அவருக்கு அவர் சொன்ன வார்த்தைகளை நினைவூட்ட விரும்புகிறேன்.

### தீர்க்கப்படவேண்டிய பிரச்னைகள்

மொழிப் பிரச்னையும் இந்தியர் பிரச்னையும் உடனடியாகத் தீர்க்கப்படவேண்டியன. டாக்டர் என். எம். பெரேராவின் பத்து அம்சத் திட்டம் பதினான்கு அம்சத் திட்டமாக மாறியுள்ளது, இப்போதுள்ள சட்டங்களில் திருத்தம் செய்யப்பட்டு அதனால் தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு ஆறுதல் தரக்கூடியதாக இருக்கலாம். ஆனால் அது நிரந்தரத் தீர்வு என்று சொல்லிவிட முடியாது.

சிங்கள மொழிச் சட்டத்தை இல்லாமற் செய்வது முடியாத காரியம். ஆனாலும் ஆங்கிலத்தையும் தமிழையும் துணை மொழிகளாக அங்கீகரிப்பதனால் பிரச்னைகள் தீரக் கூடும்.

சிங்களம் தெரியாத தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டால் அவர்கள் எவ்வளவு வேதனைப் படுகிறார்கள் என்பதனை தமிழ் தெரியாத சிங்கள மக்களுக்கு தமிழில் கடிதம் அனுப்பினால் அவர்கள் என்னபாடுபடுவார்கள் என்பதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

சிங்கள தமிழ் மக்களிடையே நிலவும் கசப்பு மனப்பான்மையை சட்டங்களினால் நீக்க முடியாது. மனமாற்றம் ஒன்றின் மூலமே கசப்பு மனப்பான்மை நீங்கி ஐக்கிய உணர்ச்சி தலைதூக்கும்.

### நேசக் கரத்தை பற்றுக

1956ம் ஆண்டில் நிலவிவந்த நிலைமை மாறிவிட்டது. சாதாரண சிங்கள மக்கள் தமிழர்களுக்கு உரிமை வழங்கி அவர்களுடன் நேசமாக வாழவிரும்புகிறார்கள். இப்போது ஏற்பட்டுள்ள புதிய நிலைமையை ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும். நேசமனப்பான்மையுடன் அன்புக்கரம் நீட்டும் பெரும்பான்மையினருடன் சேர தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.

### இந்தியரை வெளியேற்றுவது சாபக்கேடு

இலங்கை இந்தியர் பிரச்னையும் மிகமுக்கியமானது. நாடற்றவராகக் கருதப்படுவோர் மூதாதையர் காலங்தொட்டு இங்கேயே வாழ்ந்துவருகிறார்கள். அவர்கள் விஷயத்தில் கடின மனப்பான்மையுடனே அனைவரும் நடந்துகொள்ளுகிறார்கள். இலங்கை இந்தியர் பிரச்னை மனிதாபிமானத்திற்கு எதிரானது. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டால் அது இந்த நாட்டின் சாபக்கேடாகவே இருக்கும்.

கல்விமுறையை நடைமுறைக்கேற்றதாக வகுத்துக்கொண்டால் வேலையில்லாத் திண்டாட்டம் போய்விடும்.

விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஏற்படாதவரை மொழிப்பிரச்னையோ, இலங்கை - இந்தியர் பிரச்னையோ தீராது. மக்கள் ஒற்றுமைப்படாவிடில் இலங்கை முன்னேறமுடியாது.

அரசாங்கம் மனம்வைத்தால் பிரச்னைகள் தீரக்கூடும். பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் விஷயத்தில் இரக்கம், தயவு என்பனவற்றுடன் நடந்துகொள்ளக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்."

கல்லூரி அதிபர் திரு. குமாரசாமி ஆண்டறிக்கையை வாசித்தார். மாணவர்களுக்கு திரு. வில்மட் பெரேரா பரிசுகளை வழங்கினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# நயினாதீவு நாகபூஷணி ஆலய அன்னதான மண்டப அமைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

நயினை நாகபூஷணியம்மன் அன்னதான சபையினர் தற்போது உபயோகத்தில் இருந்துவரும் (500 பேர் அமர்ந்து உணவருந்தக்கூடிய) கீற்றுக்கொட்டகைக்குப் பதிலாக விரைவில் ரூபா 65000 செலவில் அன்னதான மண்டபமொன்றை நிறுவுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்களென, அவர்கள் வெளியிட்டுள்ள வரவு-செலவு அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

இம் மண்டபம் 750 பேர் உணவு உண்ணக்கூடிய வசதி படைத்ததாக இருக்குமாம்.

அன்னதான மண்டபத்தை நிறுவுவதற்கு ஏற்றவொரு காணியை ரூபா 6000க்கு அன்னதானச் சபையினர் வாங்கியுள்ளார்கள். கட்டடத்துக்கான மாதிரிப்படம் ஏற்கனவே வரையப்பட்டுச் சென்ற பெப்ரவரி 2-ந் தேதி அடிக்கல் நாட்டு வைபவமும் நிகழ்ந்தேறிவிட்டது.

திருப்பணிக்கெனச் சேர்ந்த ரூபா 28044-21 இல ரூபா 26552-21 செலவாயிற்றென்றும் ரூபா 1492-34 கையிருப்பில் உள்ளதென்றும் வரவு-செலவுத் திரட்டிற் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

# வினேபாஜி - சாஸ்திரி இரண்டு மணி நேர சம்பாஷணை

## தமது வெளிநாட்டு விஜயம் குறித்து புதிய பிரதமர் தகவல்

வார்தா, ஜூன் 17

இந்தியப் பிரதமமந்திரி திரு லால்பகதூர் சாஸ்திரி வார்தாவுக்கு 5 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஆச்சார்யா வினேபாபாவேயைச் சந்தித்துப் பேசினர்.

பாவே கு உடல்நிலை சரியாய் இல்லாத போதிலும் குடிசைக்கு வெளியே வந்து பிரதமமந்திரியை வரவேற்ருர். தமக்கு உடல்நிலை இப்போது தேறியிருப்பதாய் வினேபாஜி திரு சாஸ்திரியிடம் கூறினுர்.

இருதலைவர்களும் சுமார் 2 மணிநேரம் பேச்சு நடத்தினர். பிரதமமந்திரியுடன் திட்டக்கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீமன் நாராயணனும் வந்திருந்தர்ர். காஷ்மீர், பாரத-சீன உறவு ஆகியவற்றைப்பற்றி இருவரும் பேசியதாகத் தெரிகிறது. உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நிலைமை குறித்து வினேபாஜி ஆழ்ந்து கவனித்து வருகிறுர் என பிரதமமந்திரி சாஸ்திரி பின்பு கூறினுர்.

பாகிஸ்தானும் சீனுவும் அண்டை நாடுகள் என்றும், அண்டை நாடுகளுடன் நேசமாய் இருப்பதே நல்லது என்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

இதன்பின் வார்தாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சாஸ்திரி பேசினுர். அடுத்த 5-ம் திகதி காமன்வெல்த் பிரதமமந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு தாம் லண்டன் செல்வதாயும் திரும்பும் வழியில் வேறு இரண்டு அல்லது மூன்று நாடுகளுக்கும் தாம் செல்லக்கூடும் என்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார். செய்ரோவுக்குச் செல்ல தாம் சம்மதித்திருப்பதாயும் இதர நாடுகள் பற்றி இனித்தான் முடிவுசெய்யப்படும் என்றும் அவர் கூறினுர்.

"வேலையில்லாமை, வறுமை ஆகியன இந்தியாவில் இருக்கக்கூடாது என காலஞ்சென்ற நேருஜி கூறி, அதை ஒழிக்கப் பாடுபட்டு வந்தார் என்றும் அவரது விருப்பத்தை நிறைவேற்றும் விஷயத்தில் தம்மீது பெருஞ் சுமை ஏற்றப்பட்டிருக்கிறது" என்றும்சாஸ்திரிமேலும் கூறினுர்.

இந்தக் கூட்டத்தில் ஆச்சார்யா வினேபாபாவேயும் கலந்து கொண்டார்.

திரு. சாஸ்திரி தொடர்ந்து பேசுகையில் உணவு தான்ய வர்த்தகர்கள் மக்களின் வாழ்வோடு விளையாடக் கூடாது என்ருர்.

ஆச்சார்யா வினேபாபாவே பேசுகையில், நேருவின் மறைவுக்குப் பின் திரு. சாஸ்திரி ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்ட செயல் இந்தியா முதிர்ச்சியடைந்த நாடு என்பதைக் காட்டிவிட்டது என்ருர்.

காந்திஜி ஏற்றிவைத்த சுடரை நேருஜி மேலும் உயரும்படி செய்தார். இது ஒளி குன்ருமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் பாவே கூறினுர்.

பிரதமமந்திரி சாஸ்திரி நேற்றிரவு நாகபுரிக்குச் சென்ருர். தாம் வெளிநாடு செல்லு முன், பாவேஜியைச் சந்தித்து ஆத்மபலம் பெற உதவியுள்ளதாக சாஸ்திரி கூறினுர்.

### "நேருவுக்கு நான் இணையில்லை"

புதுடில்லி, ஜூன் 17

"நேரு மாமாவைப்போல நீங்களும் குழந்தைகளை அந்த அளவுக்கு நேசிக்கிறீர்களா?" என 6 வயதுச் சிறுவன் ஒருவன் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியைக் கேட்டான்

புன்முறுவலுடன் ஸ்ரீ சாஸ்திரி சிறுவனின் கன்னத்தைத் தடவிக்கொடுத்துக் கூறினுர்:—

"நேருஜி மாபெரும் தலைவர். அவருக்கு அருகில் கூட நான் வர முடியாது, ஆனுல் குழந்தைகளிடம் நிச்சயமாக நான் அன்பு பாராட்டுகிறேன்."

சிறுவனுக்கும், சாஸ்திரிக்குமிடையே இந்தச் சம்பாஷணை பிரதமர் இல்லத்தின் புல்வெளியில் நடைபெற்றது. சிறுவன் தூய உடை தரித்துக்கொண்டு தனது பெற்ருேர்களுடன் வந்து சாஸ்திரிக்கு வணக்கம் செய்தான். சாஸ்திரிக்கு அவன் மாலைபோட முயன்ருன். ஆனுல் பிரதமர் இடம்தரவில்லை. அவர் அந்த மாலையை சிறுவனுடைய கழுத்தில் போட்டார்.

### சாஸ்திரி திட்ட கமிஷன் தலைவர்

புதுடில்லி, ஜூன் 17

பிரதமமந்திரி திரு. சாஸ்திரி திட்டக்கமிஷன் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிருர். கமிஷனில் திரு. குல்சாரிலால் நந்தா, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, சர்தார் சுவர்ண்சிங், திரு. பலிராம்பகத் ஆகிய மந்திரிகளும் உறுப்பினர்களாய் இருக்கின்றனர்.

—

### நேபாள மன்னர் டில்லி வருகை

புதுடில்லி, ஜூன் 17

நேபாள மன்னர் மகேந்திராவும், ராணி ரத்னவும் 2 நாள் இந்தியாவில் தங்கும் பொருட்டு இன்று டில்லி வந்தனர், ஸ்ரீமதி இந்திராவைச் சந்தித்து அவர்கள் நேருவின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டனர்.

—

### நேருவின் கல்வித்தொண்டு

புதுடில்லி, ஜூன் 17

கல்விக்கு திரு நேரு ஆற்றிய பணிகுறித்து அகில பாரதசெகண்டரி ஆசிரியர் சங்கம் ஒரு புத்தகத்தை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

நேருவின் வாழ்வுபற்றி புகைப்படக் கண்காட்சி ஒன்று புவனேஸ்வரத்தில் நடைபெறுகிறது.

—

### பாரத—நேபாள தொடர்பு

புதுடில்லி, ஜூன் 17

பாரதத்துக்கும் நேபாளத்துக்குமிடையிலான நேரடி டெலிபோன் தொடர்பு விரைவில் ஏற்படுத்தப்படவிருக்கிறது.

—

### பட்லர் மாஸ்கோ விஜயம்

லண்டன், ஜூன் 17

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. பட்லர் அடுத்த மாதம் மாஸ்கோ சென்று திரு. குருஷ்சேவைச் சந்திக்கவிருக்கிருர். இம்மாத முற்பகுதியில் பிரிட்டிஷ் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஹரோல்ட் வில்சன் குருஷ்சேவைச் சந்தித்தார்.

சென்னையில்

## பர்மா தூதரகம் முன் இந்தியர் உண்ணுவிரதம்

சென்னை, ஜூன் 17

பர்மா இந்தியர்களுக்குநிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக ஸ்ரீஜயராஜ் என்ற இந்தியர் சென்னையிலுள்ள பர்மியத் தூதரகத்தின்முன் 3 நாள் உண்ணுவிரதத்தைமேற்கொண்டிருக்கிருர்.

ஸ்ரீஜெயராஜ், பர்மாவுடன் தொடர்புகள் உள்ளவர்.

பர்மா அரசாங்கம் சீனப்பிரஜைகள் விஷயத்தில் சாதகம் காட்டிவருவதாயும் இந்தியப் பிரஜைகளிடம்தான் கடுமையாக நடந்து கொள்வதாயும் அவர் குற்றஞ்சாட்டுகிருர்.

பொதுவாக இந்தியர்களும் குறிப்பாகத் தமிழர்களும் பர்மா அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்றும் அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் ஸ்ரீஜயராஜ் கூறுகிருர்.

பொதுவாக இந்தியர்களும், குறிப்பாக தமிழர்களும் பர்மா அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்றும் அவர்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கூறுகிருர்.

"பர்மாவில் தமிழர்கள் படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்யுங்கள். பர்மாவாழ் இந்தியர்களுக்கும் சீனர்களுக்குமிடையில் பட்சபாதம் காட்டுவது ஏன்?" என்பது போன்ற கோஷங்கள் அடங்கிய அட்டைகள் அவர் பக்கத்தில் காணப்படுகின்றன.

இந்தோனேஷிய

## கொரில்லாக்களை வாபஸ் செய்ய உத்தரவு

டோக்கியோ, ஜூன் 17

போர்னியோ எல்லையிலிருந்து தமது கொரில்லாக்களை விலகிச் செல்லுமாறு இந்தோனேஷியா உத்தரவிட்டிருக்கிறது என அந்த நாட்டு அதிகாரி ஒருவர் டோக்கியோவில் கூறினுர்.

இதைத் தொடர்ந்து இன்று வெளிநாட்டு மந்திரிகள் சந்திக்கலாம் எனத் தெரிகிறது. இதற்கிடையில் கொரில்லாக்கள் வாபஸ் பெறுகிருர்களா என்பது தங்களுக்கு இன்னும் தெரியவில்லை என மலேஷிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### கரபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினுல் நடாத்தப்பட்டு வரும் கரபந்தாட்ட "செற் அப்" விளையாட்டுப் போட்டிகளில் கல்வி இலாகா கோஷ்டியுடன் பலாலி அரசினர் ஆசிரியர் கல்லூரி போட்டியிட்டதால் கல்வி இலாகா கோஷ்டி 15—5; 15—9 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது. இதே போட்டியில் கடற்படை கோஷ்டியுடன் பலாலி ஆசிரியர் கல்லூரி விளையாட இருந்தும் கடற்படை கோஷ்டியினர் நேரத்துக்கு சமுகங் கொடுக்காததினுல் பலாலி ஆசிரியர் கல்லூரிக்கு வெற்றி கிடைத்தது.

## மே. பாக். வெள்ளத்திற்கு 250 பேர் பலி!

கராச்சி, ஜூன் 17

மேற்கு பாகிஸ்தான் ஹைதராபாத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக இதுவரை கிடைத்த விபரப்படி 250 பேர் பலியாஞர்கள் என்றும், ஏராளமான கால்நடைகள், சொத்துக்கள் ஆகியவற்றுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதென்றும், 3000 வீடுகள் இடிந்து விழுந்தன என்றும், அறிவிக்கப்படுகிறது. ஒரு கிராமத்தில் மட்டும் 150 பேர் மாண்டதாயும் தெரிகிறது.

### ஜப்பானில் 23 பேர் பலி

வட மேற்கு ஜப்பானில் ஏற்பட்ட நில அதிர்ச்சியில் இதுவரை 23 பேர் மாண்டனர் என்றும், 152 பேர் காயமடைந்தனர் என்றும், ஒரு பட்டினத்தில் 3-ல் ஒரு பகுதி தரைமட்டமாகி விட்டதாயும் அறிவிக்கப்படுகிறது. போக்குவரத்து, தகவல் தொடர்புகள் அனைத்தும் சீர்குலைந்தன.

## நவீன காமன்வெல்த் பற்றி பிரிட்டிஷ் பிரதமர்

லண்டன், ஜூன் 17

பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையேயுள்ள அகண்ட வித்தியாசத்தை ஒழிக்கும் உலகின் மாபெரும் பணியில் நவீன காமன்வெல்த் உதவிபுரிய முடியும் என பிரிட்டிஷ் பிரதமர் திரு. அலெக்டக்ளஸ் ஹியூம் காமன்வெல்த் பத்திரிகை சங்கத்தில் பேசும்போது கூறினுர்.

காமன்வெல்த்துக்கிடையே ஒத்துழைப்பை மேலும் அபிவிருத்திசெய்வதுபற்றி அடுத்த பிரதமர்கள் மகாநாடு தீவிர கவனம்செலுத்தும் என்றும் சர் ஹியூம் கூறினுர்.

இந்த பத்திரிகை யூனியன் மகாநாட்டில் இலங்கை, இந்தியா, ஹாங்காங், ஆஸ்திரேலியா, கென்யா, நியூஸிலாந்து, நைஜீரியா, பாகிஸ்தான், ரொடீஷியா, பிரிட்டிஷ் கயானு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பத்திரிகை பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

பிரிட்டிஷ் பிரதமர் மேலும் பேசியபோது, உலகத்தை பலாத்காரத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்தமுடியாது என்ற உண்மையை கடைசியாக சோவியத் ரஷ்யா உணர்ந்து கொண்டது எனக் கூறினுர்.

சோவியத் யூனியனுக்கும் மேற்கு உலகுக்குமிடையே நிலவிய அகண்டபிளவு இப்போது நெருக்கமாக வந்து கொண்டிருக்கிறது.

இவ்விஷயத்தில் காமன்வெல்த் பேருதவியாக இருக்கும் என்றும் பிரிட்டிஷ் பிரதமர் கூறினுர்.

## "கவர்னர் நடவடிக்கைக்கு நானே அதிகாரமளித்தேன்"

### பிரிட்டிஷ் கயானு பற்றி மந்திரி சாண்ட்ஸ் அறிக்கை

லண்டன், ஜூன் 17

பிரிட்டிஷ் கயானுவில் காடைதனத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற விஷயத்தை அங்குள்ள பாமர மக்கள் வரவேற்கிருர்கள் என காமன்வெல்த் உதவி மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸ் காமன்ஸ் சபையில் கூறினுர்.

இப்போது அங்கு நிலைமை அமைதியாக இருப்பதாயும், கரும்புத்தோட்டத்தில் அங்கு நடைபெற்ற 4 மாத வேலைநிறுத்தம், இனக்கலகம், படுகொலை, கொள்ளை ஆகிய சட்டவிரோத சக்திகளுக்கு இடமளித்து விட்டதென்றும் கூறினுர்.

40 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 400 முதல் 500 பேர் வரை காயமடைந்தனர் என்றும் அவர் கூறினுர்.

"இந்த பலாத்கார, பயங்கர பின்னணியில் சிரேஷ்ட சிவில் சேவை அதிகாரி திரு. ஆர்தர் ஆப்ரஹாமையும், அவரது 7 பிள்ளைகளையும் கொலை செய்தது நிலைமையை மேலும் கொத்தளிப்படையச் செய்தது.

இந்தப் பயங்கர நிலைமையை மேலும் பரவாமல் தடுக்குமுகமாகவே கவர்னர் அங்கு அதிகாரத்தை மேற்கொண்டு, பலரைக் காவலில் வைக்கும்படி ஆயிற்று. இதற்கான அவசியமான அதிகாரங்களை நான் கவர்னருக்கு அளித்தேன்" என்றும் சாண்ட்ஸ் குறிப்பிட்டார்.

"ஆப்ரஹாம் குடும்பத்தினரின் இறுதிச் சடங்கின்போது பெரும் ஜனக் கூட்டம் இருந்தும் அங்கு பலாத்காரம் நடைபெருதிருந்ததற்குக் காரணம் கவர்னர் எடுத்துக் கொண்ட உறுதியான நடவடிக்கையேயாகும்" என்றும் திரு. சாண்ட்ஸ் கூறினுர்.

—

### அமெரிக்க விமானி கைது

வியண்டியன், ஜூன் 17

அமெரிக்க விமானி ஒருவரை பதட்லாவோ துருப்புக்கள் சிறைப்பிடித்திருப்பதாய் பதட்லாவோ தலைவர் கூறினுர்.

—

### "சோஷலிஸ பட்ஜட்"

ஹொரணை, புதன்

"ஆசியாவிலே ஒரு சிறந்த பொருளாதார நிபுணராக விளங்கும் நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா இலங்கை சரித்திரத்தில் இதுவரை இடம் பெருத ஒரு சோஷலிஸ பட்ஜட்டை இம்முறை தயாரிப்பார் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை" என்று தெஸ்பாவ எம். பி. திரு. சோமவீர சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

பதகெதற மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சுகாதார வார விழாவில் பேசுகையில் தான் திரு. சோமவீர சந்திரசிறி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் சுகாதாரம் பற்றி அவர் குறிப்பிடுகையில், ஆரோக்கிய வாழ்க்கைக்கு சுத்தம், சுத்தமான உணவு ஆகியவை அத்தியாவசியமானவை என்பதை மக்கள் உணர்ந்திருந்த பொழுதிலும் நாட்டின் சுகாதார நிலைமைகள் மோசமாகிவிட்டன என்று கூறினுர்.

டில்லியில்

### சர்வதேச திரைப்படவிழா

புதுடில்லி, ஜூன் 17

3-வது சர்வதேச திரைப்படவிழா வருகிற ஜனவரி மாதம் புதுடில்லியில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

# "புற்று நோய் குறித்து அஞ்சவேண்டாம்"

## பிரசாரக் கூட்டத்தில் அறிவுரை

சுழிபுரம், புதன்

"இன்று புற்றுநோயைக் கண்டதும் மக்கள் அஞ்சி நடுங்குகின்றனர். அதன் காரணமாக அவர்கள் வைத்திய சிகிச்சைபெறமுன்வராது வீடுகளில் பதுங்கிவிடுகின்றனர். இதனுல் ஈற்றில் மரணத்தையே தேடிக்கொள்கிருர்கள். புற்றுநோய் ஒரு தொற்று நோயல்ல; அது பரம்பரை வியாதியுமல்ல. ஆரம்பநிலையில் அதனைக் கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிப்பதன் மூலம் இந்நோயைக் குணப்படுத்தமுடியும். இன்று மாறகமவிலுள்ள புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்திற்குவரும் நோயாளர்கள் பெரும்பாலும் நோய்முற்றிய நிலையிலேயே வருகின்றனர். இதனுல் அவர்களது உயிரைக் காப்பாற்றுவது பெரும் சிரமமாகவிருக்கிறது".

இவ்வாறு இலங்கைப் புற்றுநோய நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் எம். ஜே. ஏ. சந்திரசேகரா இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற புற்றுநோய்த் தடைப்பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ்-மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். டாக்டர் சந்திரசேகரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இலங்கைப் புற்றுநோய் நிவாரண சங்கம் இந்நாட்டிலுள்ள புற்றுநோயாளர்களின் வசதிகருதி மாறகமவில் நவீன சிகிச்சை நிலையமொன்றையும், இருவிடுதிகளையும் நடத்திவருகிறது. அங்கு புற்றுநோயாளர்களுக்கு எவ்வித கட்டணமுமின்றி இலவசமாகச் சிகிச்சையளிக்கப்படுகிறது. இந்த வசதிகளை இப்பகுதியிலுள்ள புற்றுநோயாளர்களும் பாவிக்க முன்வரவேண்டும். புற்றுநோயை எதிர்த்துக்கட்டும் போராட்டமொன்றில் எங்கள் சங்கம்ஈடுபட்டுள்ளது. இதற்கு நீங்களனைவரும் ஆதரவளிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளைச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து நோயை ஒழித்துக்கட்ட உதவுமாறு உங்களனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதார பரிசோதகர் திரு. யோகேந்திரன் உட்பட வேறு பலரும் பேசினர் திரைப்படக் காட்சியும் நடைபெற்றது.

— —

## சேக்கிழார்பெருமான்

உடுப்பிட்டி, புதன்

கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தில் சொற்பொழிவாற்றவிருந்த தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம் வந்து சேராத காரணத்தால் வித்துவான் க. வேந்தனுர் 'பெரிய புராணம்' என்பது பற்றிச் சொற் பொழிவாற்றினுர்.

அவர் பேசுகையில் கூறியதாவது:-

"சைவத்திற்கும் தமிழுக்கும் அநபாயச் சோழனும், சேக்கிழாரும் ஆற்றிய தொண்டு அளவிடற்பாலது. கறையான் அரித்த பாடல் ஏடுகளையும் பக்குவமாகச் சேர்க்சச் செய்து ஈற்றில் பெரியபுராணத்தையே தொகுத்த சேக்கிழார் பெருமானை சைவம் உள்ளவரை உலகம் மறக்காது"

## "செயல் வீரர் நேருஜி"

உடுப்பிட்டி, புதன்

"இந்தியாமீது சீன படையெடுத்தபோதும் ஐ. நா. விலே சீனவுக்கு இடங்கொடுக்க வேண்டும் என்று வாதாடியவர் நேரு. இத்தகைய பண்பு யாருக்குண்டு? நடுநிலைமையே தனது கொள்கையாகக் கொண்ட பாரதப் பிரதமரின் கொள்கைஅசைக்க முடியாது."

உடுப்பிட்டி அமெரிக்க கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் சங்க விசேஷ கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் ஏ. கே. வேலன் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"அமைதியான ஓர் உலகை அமைக்க முடியும், ஆட்சி புரிய முடியும் என்பதை சொல்லில் மட்டுமன்றி செயலிலும் காட்டினுர் நேரு. அவர் ஒரு செயல் வீரர் என்பதைவிட நாம் என்ன கூறமுடியும்? ஜனநாயகம்மூலம் சாத்வீக புரட்சி நடத்த முடியும் என்பதை அனுபவத்தால் நன்குணர்ந்தவர் நேரு. இயேசு, நபி, புத்தர் போன்ற மதத் தலைவர்களுக்கிருந்த ஈடுபாடு அரசியல் துறையிலே நேருவுக்கிருந்தது."

இக்கூட்டத்திற்கு திரு. க. ஜெயரத்தினம் தலைமைவகித்தார். திரு. வி. எம். நடராசா நன்றியுரை கூறினுர்.

———

## வருட பூசை

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த சுவாமிபூசையும், அன்னதானமும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றன. பகல் விசேஷ ஆராதனைகள் நடைபெறும்.

# பலாலி ஆசிரிய கலாசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி

## இராமநாதன் இல்லம் வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், வியா.

பலாலி ஆசிரிய கலாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி கல்லூரியின் அதிபர் திரு. எஸ். கந்தசாமியின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பொலிஸ் அதிகாரி திரு. வான்சன்டனும் அவரின் பாரியாரும் சமுகமளித்தனர். ஆசிரிய மாணவர்களின் அணிநடையுடன் விளையாட்டுப்போட்டி ஆரம்பமாகியது. முடிவில் இராமநாதன் இல்லம் 97 புள்ளிகளைப் பெற்று சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது. இரண்டாவதாக இரத்தினம இல்லம் 75 புள்ளிகளைப் பெற்றது. பொன்னையா இல்லம் 57 புள்ளிகளைப் பெற்றது.

இல்லங்களுக்கிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் இரத்தினம் இல்லமும் உதைபந்தாட்டப் போட்டியில் இராமநாதன் இல்லமும், கரபந்தாட்டப் போட்டியில் இரத்தினம் இல்லமும் சாம்பியன் கிண்ணங்களை முறையே பெற்றனர். ஆண்களில் சாம்பியனுக டி. எல். கே பாவாவும், பெண்களுள் செல்வி எவ். மஜீத்தும் கிண்ணங்களை பெற்றனர்.

### விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் வருமாறு

ஆண்கள்

440 யார்:- டி. எல். கே. பாவா, என். எம். இக்பால், கே, சாம்பமூர்த்தி.

குண்டெறிதல்:- பி. அந்தோனிப்பிள்ளை, ஜி. சவுந்தரராசா, எம். பி. ஆசீர்வாதம்.

கெந்தியடித்துப் பாய்தல்:- டி. எல். கே. பாவா, எம். பிரான்ஸிஸ்சேவியர், எஸ். ஏ. துரைராசா.

ஈட்டி எறிதல்:- எம். ஏ. ஹசன், எம். பி. ஆசீர்வாதம், ஏ முஷீன்.

உயரம் பாய்தல்:- யே. எஸ். பெர்ணுண்டோ, வி. பொன்னம்பலம், பி. எம். கமால்டீன்.

880 யார்:- என். எம். இக்பால், எம். பிரான்ஸிஸ் சேவியர், ஏ.முஷீன்.

100 யார்:- எஸ். எம். ஏ. காதர், கே. சாம்பமூர்த்தி, எம். ஏ. ஹசன்.

நீளம் பாய்தல்:- ஜி. சவுந்தரராசா. எஸ். எம். ஏ. காதர், வி பொன்னம்பலம்.

220 யார்:- டி. எல். கே. பாவா, கே. சாம்பமூர்த்தி, ரி. எம். பருக்ஜான்.

பரிதி வட்டம் எறிதல்:- ஜி. சவுந்தரராசா, பி. அந்தோனிப்பிள்ளை, எம். சி. எம். ஹனிபா.

ஒரு மைல் ஓட்டம்:- எம். பிரான்ஸிஸ்சேவியர்.ஏ.முஷீன் ஏ. ஆர். எம். இஸ்மாயில்.

4X110 யார் அஞ்சல் ஓட்டம்:- இராமநாதன் இல்லம், இரத்தினம் இல்லம், பொன்னையா இல்லம்.

4X440 யார் அஞ்சல் ஓட்டம்:- இராமநாதன் இல்லம், இரத்தினம் இல்லம், பொன்னையா இல்லம்.

பெண்கள்

நீளம் பாய்தல்:- செல்விகள் எவ். மஜீத், கே. கிருஷ்ண

(5-ம் பக்கம்பார்க்க)

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Donald Sinden
& Peggy Cummins
in
Your Money or
Your Wife
(Adults Only)

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ண (திருமலை) ஜுப்பிட்டர் (குருணகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்

புத்துணர்ச்சியுடன்
திகழ கோயாவின்
புத்தம் புதிய
திவ்யமான,
மெல்லினிய
மணங்கமழும்
என்ட்டைஸ்
பாவியுங்கள்






ஒரே சுகந்தமுள்ள சோப்பும் டல்க்கும் பாவித்தலே முறையானது. கோயாவின் சுகபோக சோப்பும், வியர்வை துர்நாற்றத்தையும் போக்க வல்ல உலகிலேயே மிக மிருதுவான, மென்மையான டல்க்கும், இவ்வாறு சேர்த்து பாவிப்பதற்கு சிறந்தவை.

ஒவ்வொரு நாளையும் பரிமள புத்துணர்ச்சியுடன் துவங்க, கோயாவின் சுகந்த என்ட்டைஸ் பாவியுங்கள். அதன் இனிய நறுமணம் நாள் முழுவதும் உங்கள் உடலை சூழ்ந்து நிற்கும்.

மற்றும் லவ் எப்பேர் பாஸ்போர்ட் ப்ளாக் ரோஸ் கார்டீனியா நம்பர் 5 சுகந்தங்களிலும் கிடைக்கும்.

கோயா ● லண்டன் ● பாரீஸ் ● நியு யோர்க்

# ஒரு கரண்டி பாலின் சுவையை எந்தப் பையனும் விரும்புவான்






இனிப்பூட்டப்பட்ட மில்க்மெய்ட் கட்டிப் பால் தடவிய பாணையே உலகடங்கிலுமுள்ள சிறுர்கள் விரும்பி உண்கிறுர்கள். அவர்கள் அதை விரும்புவதன்றி அதன் மேல் அலாதி பிரீதி கொண்டுள்ளார்கள்! அது அவர்களுக்கும் மிகவும் நல்லது— உடலுறுதிக்கு சீனியும், பசுப்பாலிலுள்ள திறம் சத்துக்களும் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. ஞாபகமிருக்கட்டும், மில்க்மெய்ட் பாலில்தான் விசேட விட்டமின்கள் சேர்க்கப்பட்டுள்ளன......................

சுத்தமான, புதிய பசுப் பாலில் தயாரிக்கப்பட்டது. நெஸில்ஸ் இதை உத்தரவாதமளிக்கிறது.

# மில்க்மெய்ட்

## இனிப்பூட்டப்பட்ட கட்டிப்

# பால்

தரத்துக்கு உத்தரவாதமளிக்கும் நெஸில்ஸ் உற்பத்தி


## யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்வி விளம்பரம்

1. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து முத்திரை இடப்பட்ட கேள்விகளை இரு பிரதிகளுடன் 26-6-64 நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

10ம் வட்டாரத்திலுள்ள நரிக்குண்டு என்னும் இடத்தில் ஒரு கிணறு வெட்டுதல், இரண்டு செங்கற்தொட்டிகள் முதலியன கட்டுதல்.

2. 25-6-64 நண்பகல் 12 மணிவரை மாநகர மராமத்து என்ஜினியரிடமிருந்து கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா ஐம்பதும் (50/-) கேள்விப்பத்திரத்திற்குரிய பணமாக ரூபா ஐந்தும் (5/-) செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரப் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் வேலை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட பின் கேள்விப்பத்திரக்கட்டுப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விதாரர்கள் கேள்விகள் திறக்கப்படும் பொழுது சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

4. மேலும் விபரங்களை மாநகர மராமத்து என்ஜினியரிடமிருந்து காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம் டி. டி. ஜெயசிங்கா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

நகர மண்டபம்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம். 13-6-64. 602

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

புத்தூர் நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு பல போட்டிகளையும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 8 மைல் மரதன் ஓட்டமும், 25 மைல் தூர சைக்கிள் ஓட்டமும் இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 18-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00,

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 குரல் வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்ரகானம், 1-00 கதம்பம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் நிகழ்ச்சி, 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 'நாமும் நாடும்', 7-15 நேயர்விருப்பம், 7-45 நாடகம்— 'மட்டக்களப்பு மாப்பிள்ளை' எஸ். பொன்னுத்துரை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 9-30 சாஸ்திரீய சங்கீதம், 10-00 நிலைய ஒலிப்பதிவுகள்.

## பலாலி . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை, எஸ். எல். எம். பலீல்.

டரிதி வட்டம் எறிதல்:-செல்விகள்: ஆர். மதியாபரணம், [illegible]. சுப்பிரமணியம், சி. சி. ஆர். யோசவ்.

வலைப்பந்து எறிதல்:- செல்விகள்: எஸ். எஸ். இராசேந்திரா, பி. சின்னத்துரை, வி. சங்கரப்பிள்ளை.

100 யார்:- செல்விகள்: எல். மஜீத். கே. கிருஷ்ணபிள்ளை, எஸ். எல் எம். பலீல்.

குண்டெறிதல்:- செல்விகள்: ஆர். மதியாபரணம், சி. சி. ஆர். யோசவ், பி. சுப்பையா.

220 யார்:- செல்விகள்: எல். மஜீத், எஸ். சாஹிபு, ஆர். யூ. எஸ். மரைக்கார்.

கிரிக்கெட் பந்து எறிதல்— செல்விகள்: யே. சுப்பிரமணியம், சி. சி. ஆர். யோசவ். வி. சங்கரப்பிள்ளை.

100 யசர் கயிறடித்தல்:— செல்விகள்: எஸ். சாகிபு, எஸ். எல். பலீல், யே. சுப்பிரமணியம்.

4X110 யார் அஞ்சல் ஓட்டம்:- பொன்னையா இல்லம், இரத்தினம் இல்லம், இராமநாதன் இல்லம்,

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மண்டைதீவில் (யாழ்ப்பாணத்திலிருந்து $1\frac{1}{2}$ மைல்) போக்குவரத்து சௌகரியமான இடத்தில் 100 பரப்பு காணி விற்பனைக்குண்டு வீடுகள் கட்ட வசதியான இடம். பகுதி பகுதியாகவோ அல்லது மொத்தமாகவோ விற்கப்பெறும். விபரங்களுக்கு:- க. செல்வநாயகம், மானிப்பாய். 523

வெட்போர்ட் வான் 33ஸ்ரீ5700 தொடர் 15 அந்தர் மரபொடி நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. நேரில் கலந்துகொள்ளவும். U. M. ஐதுரூஸ், 65, ஜின்னு ரோட், யாழ்ப்பாணம். டெலிபோன் 7215. 522

டாக்டருக்குச் சொந்தமான நவீன முறையில் அமைக்கப்பெற்ற தேக்க மரத்தினால் செய்யப்பட்ட புத்தம்புதிய நிலைமையிலுள்ள வீட்டுத் தளபாடங்களும் மின்சாரத்தினால் தனித்தியங்கும் நெக்கி "NECCHI" தையல் மெசின் முதலியனவும் விற்பனைக்கு உண்டு. 86, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணையில் விசாரிக்கவும். 524

### தேவை

இலங்கை வங்கிக்கு அல்லது மக்கள் வங்கிக்குப் போதிய சரியான ஆதன உறுதிப் பிணை கொடுத்து அரசாங்கத்திடம் நெல் எடுத்து கிழமைக்கு 2000 புசல் கோட்டா வேலை செய்யும் யாழ்ப்பாணம் - கண்டி ரோட் அருகாமையிலுள்ள மில்லுகளை கொமிஷனுக்கு அல்லது குத்தகைக்கு நடத்தக்கூடிய தகுதியுள்ளவர்கள் 20-6-64க்குள் மனுப்பண்ணவும். பொருளாதார முன்னணி மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 508

தேசிய சுவீப் விற்பதற்கு கிராமந்தோறும் ஆள் தேவை. 3 சத விதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்பு பிளாண் ஜூவலறிகவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461 493

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புணகளிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சுளுக்கு போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம்,

தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் [illegible]திரிமார், அரசியற் பிரமுகர்[illegible] எம்மிடம் சிகிச்சை பெற்ற [illegible]ங்கள் அடங்கிய கற்ற[illegible] இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

# பெட்ரோல் மோசடி; சில ஊழியர் மீது நடவடிக்கை

கொழும்பு, புதன்

அரசாங்க இலாகாக்களின் மோட்டார் ஜீப், கார் முதலிய வாகனங்களுக்குத் தேவையான பெட்ரோல், எண்ணெய் முதலியன இதுவரை 'அரசாங்கக் கணக்கில்' பெட்ரோல் ஷெட்டுகளில் நிரப்பப்பட்டு வந்தன. இதில் மோசடி நடைபெற்றிருப்பதாகவும் இந்த மோசடியை மராமத்து மந்திரி கண்டு பிடித்ததாகவும் இதைத் தொடர்ந்து இப்பொழுது வாகனங்களுக்குப் பெட்ரோல் நிரப்புவதற்கு அந்தந்த இலாகாத் தலைவர்களின் பெயரில் 'பெட்ரோல் ஆடர்' எழுதப்படவேண்டுமென்று உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

பெட்ரோல் மோசடி சம்பந்தமாக உத்தியோகத்தர் சிலர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

## என். எம். முடன் பழைய சிறை சகா

கொழும்பு, புதன்

20 வருடங்களுக்குமுன் டாக்டர் என். எம். பெரேராவுடன் சிறையிலிருந்த இந்திய சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. எஸ். எம். ஜோஷி நேற்று நிதிமந்திரியைச் சந்தித்தார்.

அப்போது பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்துக்கெதிராக இயங்கிய இந்த இரு இளம் புரட்சிக்காரர்களும், பம்பாயில் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். 5 மாதங்கள் இந்த இருவரும் திரு பகத்சிங்கின் தலைமையில் செயல்பட்டனர்.

'பழைய சம்பவங்களைப்பற்றி நாங்கள் விவாதித்தோம்' என டாக்டர் பெரேரா பின்பு நிருபர்களிடம் கூறினர்.

# 'தென்னுபிரிக்கா இனதுவேஷத்தை கைவிட வேண்டும்'

## பாதுகாப்பு சபையில் நார்வே தீர்மானம்

நியூயோர்க், ஜூன் 17

தென்னுபிரிக்கா தனது இனத்துவேஷக் கொள்கையை நவம்பர் மாதத்துக்கு முன் கைவிட வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றை பாதுகாப்பு சபையில் நார்வே கொண்டுவந்திருக்கிறது.

பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் வெளிநாட்டு பேச்சாளர் திரு. பெட்ரிக் கோர்டன் வாக்கர் தென்னுபிரிக்காவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் 8 தேசியத் தலைவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என ...றுத்தியிருக்கிறார்.

இத் தலைவர்களை விடுதலை செய்யுமாறுகேட்டு 28,50,00,000 பை யெழுத்து கொண்ட மாபெரும் மகஜர் ஒன்று ஐ.நா. மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆசிய-ஆபிரிக்க குழு நாடுகளைச் சந்தித்தபின் நார்வே பிரதிநிதி இத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

# "சைப்ரஸில் ஐ. நா. துருப்புகள் நீடிக்கப்பட வேண்டும்"

## பாதுகாப்பு சபைக்கு யுதாண்ட் அறிவிப்பு

நியூயோர்க், ஜூன் 17

சைப்ரஸில் ஐ. நா. துருப்புக்களின் சேவைக்காலம் இன்னும் 3 மாதங்கள் நீடிக்கப்பட வேண்டும் என தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பாதுகாப்பு சபையைக் கேட்டிருக்கிறார்.

அதே சமயம் ஐ. நா. துருப்புகளின் சேவையை கால வரையறையின்றி அங்கு நீடிக்கவேண்டும் எனவும் அவர் சிபார்சு செய்திருக்கிறார்.

இவ்வாரம் பாதுகாப்புசபை யுதாண்டின் கோரிக்கை பற்றிப் பரிசீலிக்கும் என அறிவிக்கப்படுகிறது.

அதே சமயம் சைப்ரஸில் புதிய பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர் நாஸர் சைப்ரஸ் அதிபருக்கு அனுப்பியுள்ள செய்தியில் சைப்ரஸின் சுதந்திர ஆதிபத்தியத்தில் அன்னியத் தலையீடு தவிர்க்கப்பட வேண்டுமென்பதே தங்கள் கொள்கை என அறிவித்திருக்கிறார்.

## "தொழிலாளர்களின் ஆலோசனையைப் பெறுக"

கொழும்பு, புதன்

திட்டப்பகுதி அதிகாரிகளுடன் பிரதமரும் நிதிமந்திரி டாக்டர் என். எம் பெரேராவும் அரசாங்கத்தின் உத்தேச செலவுத் திட்டத்தை நிர்ணயிப்பதுபற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

சகல அரசாங்கத் துறைகளின் தலைவர்களும், நிரந்தர காரியதரிசிகளும் 1964—1965 ஆண்டுக்குரிய உத்தேச செலவின் விபரங்களைத் தருமாறு சகல தொழிலாளர் யூனியன்களையும் கோரியுள்ளார்கள்.

பல்வேறு அரசாங்கத்துறைகளிலுமுள்ள திறமையின்மை, வீண்செலவு ஆகியவற்றை ஒழிப்பதற்குத் தொழிலாளர் யூனியன்களின் ஆலோசனைகளைப் பெறுமாறு நிதிமந்திரி கோரியுள்ளார்.

## மானிப்பாயில் புற்றுநோய் தகவல் நிலையம்

சுழிபுரம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோய் தடைப் பிரசார நடவடிக்கைகளைக் கவனிக்கும் பொருட்டும் புற்றுநோய் சம்பந்தமான தகவல்களை அளிக்கும் பொருட்டும் மானிப்பாயில் புற்றுநோய் பிரசாரத் தகவல் நிலையமொன்றை யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கம் நிறுவியுள்ளது. பிரஸ்தாப சங்கப் போஷகரான சமூகஜோதி, இராசவாசல் முதலியார் சி. தியாகராசா இத்தகவல் நிலையத்தின் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுவாரெனத் தெரிகிறது. புற்றுநோயாளர்கள் இத்தகவல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள் திரும்பினர்

யாழ்ப்பாணம், வியா

குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்துக்கு திரு. க. யோ. ஆசிர்வாதர் புதிய அதிபராக நியமனஞ்செய்யப்பட்டதை ஆட்சேபித்து பாடசாலைக்கு செல்லாத மாணவர்கள் நேற்று காலை மீண்டும் பாடசாலைக்குச் சென்றனர். புதிய அதிபரின் நியமனத்தை ஆட்சேபித்து மாணவர்கள் சில தினங்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை.

நேற்று 278 மாணவர்கள் பாடசாலைக்கு வந்திருந்தனர். 28 ஆசிரியர்கள் கடமையாற்றினர். பதில் அதிபராக கடமையாற்றியவர் 3 நாள் லீவில் சென்றுள்ளார்.

## சிற்பக்கலைஞருக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

"காலஞ்சென்ற சிற்ப விற்பன்னர் ஆறுமுகம் இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் மகாதேசாதிபதிகளாலும் கலைஞர்களாலும் சேர். பி. இராமநாதனாலும் சிற்பக்கலை வல்லமை குறித்துப் போற்றப்பட்டவர். அவரினால் உருவாக்கப்பட்ட கலைச்செல்வங்களான வண்ணை வீரமாகாளி அம்மன் ரதம், நல்லூர் கந்தசுவாமி கோவில் கைலாயவாகனம், குரும்பசிட்டி அம்மன் கோவில் ரதம், புத்தூர் சிவன்கோவில் ரதம், உரும்பராய் கற்பகப் பிள்ளையார் கோவில் ரதம், நல்லூர் கைலாசநாதர் கோவில் கைலாசவாகனம் இன்னும் இலங்கை முழுவதிலுமுள்ள அநேக சிவாலயங்களிலுள்ள சிற்பக்கலை நிறைந்த வாகனங்களை ஆக்கிக்கொடுத்த அவரின் அரியசேவையைப் பாராட்டாமலிருக்கமுடியாது. அன்னாரின் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்."

அண்மையில் காலமான சிற்பக் கலைஞர் திரு. வி. ஆறுமுகத்தின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்துக்கு அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்கம் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது. இந்த அனுதாபத் தீர்மானத்தை சங்க செயலாளர் திரு. த. இராசரத்தினம் பிரேரித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## இருவர் தலைமையில் ஒரு கூட்டம்

மாவிட்டபுரம், புதன்

ஒரு கூட்டத்துக்கு இருவர் தலைமை வகித்த சம்பவம் ஒன்று இன்று காங்கேசன் துறைப் பட்டினசபையின் மாதாந்தக்கூட்டத்தில் நடைபெற்றது. பட்டினசபைத் தலைவர் லீவில் இருப்பதனால் சபையின் மாதாந்தக்கூட்டம் உபதலைவர் திரு. சு. கிருபாமூர்த்தி தலைமையில் ஆரம்பமாகியது. கூட்டம் ஆரம்பமாகி சில நிமிடங்களின் பின் தலைவர் தான் ஏதோ அவசர வேலை காரணமாக வெளியில் செல்ல வேண்டியிருப்பதால் கூட்டத்தில் மிகுதிப் பகுதிக்கு ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. வி. இரட்ணராசாவைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதனை டாக்டர் சீனிவாசகம் ஆமோதித்தார். இதைத் தொடர்ந்து திரு. வி. வி. இரட்ணராசா தலைமை தாங்கினர். கூட்டத்தில் சகல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## பாட்டு, பேச்சுப்போட்டி முடிவுகள்

அனுராதபுரம், புதன்

ஆங்கிலப் பாட்டுப் போட்டியில் பார்வதி இல்லம் கூடுதலான புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும், தமிழ்ப் பேச்சுப் போட்டியில் சரஸ்வதி இல்லம் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளன. அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் இல்ல மாணவர்களுக்கிடையே நடைபெற்ற ஆங்கிலப்பாட்டு, தமிழ் பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு:-

ஆங்கிலப் பாட்டுப் போட்டி

மேற்பிரிவு: எம். சகீர், என். ஜெகதீஸ்வரி, எஸ். நவமணி.

கீழ்ப்பிரிவு: ஜே. பிரேம்நாத், ரி. கந்தசாமி, எஸ். முத்துச்சாமி.

தமிழ் பேச்சுப்போட்டி

மேற்பிரிவு: யூ. இராசத்தும்மா, ச. தம்பையா, து. சித்திரசியா.

மத்தியபிரிவு: ச. நளாயினி, யோ. பிரேம்நாத், ச. நமசிவாயம்.

கீழ்ப்பிரிவு: ச. புவனேஸ்வரி, கி. சிவபாலன், கெ. அங்கம்மா.

ஆரம்ப பிரிவு: ச. தேவராசா, ச. ஜெயச்சந்திரமோகன், முத்துபிகாரி பாத்துமா.

# காதலில் தோல்வி கண்ட கன்னி தற்கொலை!

அல்லைப்பிட்டி, புதன்

காதலில் ஏற்பட்ட தோல்வியினால் மண்டைதீவைச்சேர்ந்த 23 வயதான செல்வர் அன்னப்பிள்ளை என்னும் இளம் பெண் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இவரின் மரணம்பற்றி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. அ. வல்லிபுரநாதன் மரண விசாரணை நடத்தினர்.

காலஞ்சென்றவர், கிராம சேவையாளருக்கும் தமது சகோதரருக்கும் எழுதிய இரு கடிதங்கள் மரணவிசாரணை அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

"எனது மரணத்துக்கு காதல்தான் காரணம். எனது அத்தான் என்னைக் காதலித்தார். ஆனால் வஞ்சித்துவிட்டார். நான் மூன்றுமாதக் கர்ப்பிணி. ஊரவர்களின் பழிச்சொற்களுக்கு ஆளாகுமுன் நான் தற்கொலை செய்துவிடுவதே மேலாகும்", என்று காலஞ்சென்றவர் கிராமசேவகருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காலஞ்சென்றவரின் சகோதரர் நல்லலிங்கம் சாட்சியமளிக்கையில் தமது சகோதரிக்கும் ஒரு மைத்துனருக்குமிடையே நேசத்தொடர்பிருந்ததென்றும் சில தினங்களாக தமது சகோதரி கவலையடைந்து காணப்பட்டார் என்றும் கூறினர்.

விசாரணையின் பின் திடீர் மரணவிசாரணை அதிகாரி, தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## சுகாதாரமான்யத்தை குறைக்க யோசனை

கொழும்பு, புதன்

சுகாதாரப்பகுதி தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று சுகாதார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து எதிர்வரும் வரவுசெலவுத் திட்டத்தில் சுகாதாரப்பகுதிக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் மான்யம்பற்றி விவாதித்தனர். சுகாதார செலவுகளுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் மான்யம் தற்பொழுது சுமார் 17 கோடியே 40 லட்சம் ரூபாவாகவிருக்கிறதென்றும், ஆனால் இத்தொகையை மூன்று கோடியே 50 லட்சம் ரூபாவாகக் குறைக்க முடியுமென்றும் இதே சமயம் நாட்டுமக்களுக்கு நல்ல சுகாதாரசேவையையும் அளிக்க முடியுமென்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இவர்கள் பல யோசனைகளையும் தெரிவித்துள்ளனர்.

## புதுவருட நிர்வாகிகள்

கொழும்பு, புதன்

எம். ஜி. ஆர். மன்றபொதுக்குழு கூட்டம் திரு. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகள் விபரம் வருமாறு:

சி. கே. சண்முகம் போஷகர், தாமரைச்செல்வன் - தலைவர், செல்வி அமீனுபேகம் - துணைத்தலைவி, கம்பனைதாசன்-பொது செயலாளர், எஸ். ஏ. அழகேசன்-தலைமை நிலைய செயலாளர், எஸ். எம். அன்பெழில்-பொருளாளர்.

ஆட்சிக்குழு உறுப்பினர்களாக ஏ. சிக்கந்தர், இரா. மில்ட்டன், கே. முருகேசன், எம். ஏ. மணிமாறன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## கலைப் போட்டிகள்

நல்லூர், வியாழன்

உடுப்பிட்டி தமிழரசுக் கிளை வருகிற சனிக்கிழமை கலைப் போட்டிகளை நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. பேச்சு, சங்கீதம், நடனம், நாடகப்போட்டிகள் நடத்தப்பட்டு அன்றையதினமே பரிசுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஷெல் கம்பெனி அப்பீல்

கொழும்பு, புதன்

இலங்கை பெட்ரோலியம் கார்ப்ரேஷன் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நஷ்டஈடு நீதிமன்றத்தின் அதிகாரத்தை எதிர்த்து ஷெல் கம்பெனி சுப்ரீம் கோர்ட்டில் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறது.

## தொழிற்சாலையில் தாமத வேலை

கொழும்பு, புதன்

ஒறுவெலஎனுபிட்டியிலுள்ள இரும்பு, எஃகு தொழிற்சாலை தனது உற்பத்தியை அடுத்த வருட மத்தியில் ஆரம்பிக்காது எனத் தெரியவருகிறது.

தொழிற்சாலை பூரணமாக அமைக்கப்படாததே இதற்குரிய முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது. இத்தொழிற்சாலைக்காக வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்த ஏராளமான உபகரணங்களும் தளபாடங்களும் வீணாகக் கிடப்பதாக தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இ. போ. ச. வேலைத்தளம் மூடப்பட்டது!

### தொழிலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, வியாழன்

வெரஹெர இ. போ. ச. மத்திய வேலைத்தளம் இன்று மூடப்பட்டது. வேலைத்தளத்தில் கடமையாற்றும் 25,000 தொழிலாளர்களும் உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு வார காலமாக தாமதமாக வேலை செய்வதை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக தொழிற் பிரதிநிதிகளுடன் டைரக்டர்கள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததன் விளைவாக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## என். எம். மின் அந்தரங்க காரியதரிசி

கொழும்பு, புதன்

"லங்காதீப" பத்திரிகையின் ஆசிரியப் பகுதியில் கடமையாற்றிய திரு. சேனகுணசேகரா, நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேராவின் அந்தரங்கக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## "இன்ஸ்பெக்டர் மீது உடன் விசாரணை"

கொழும்பு, வியாழன்

பாணந்துறை உதவி இன்ஸ்பெக்டர்மீது உடன் விசாரணை நடத்துமாறு பாணந்துறை எம். பி. திரு. லெஸ்லி குணவர்த்தன பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு ஒரு மகஜர் அனுப்பியுள்ளார். இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்குப் பாணந்துறை உதவி இன்ஸ்பெக்டர் அடித்ததன் விளைவுதான் இது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.